# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வெள்ளிக்கிழமை 16.04.2021 supeedsam.com supeedsam@gmail.com









# யாழ் இளைஞர்கள் 1600 பேர் இராணுவத்தில் இணைவு

(யாழ்.கீதன்)

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த குறைந்தது 1,600 தமிழ் இளைஞர்கள் மூன்று மாத காலத்திற்குள் இலங்கை இராணுவத்தில் சேர்ந்துள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண படைத்தலைமையகத்தில் பாதுகாப்புப் படை அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும் போது அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## செருப்பு தைக்கும் தொழிலாளியின் குடும்பம் உட்பட 6 பேருக்கு கொரோனா

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை உப்புவெளி பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வட்டார எல்லைக்கு உற்பட்ட பாலையூற்று பிரதேசத்தில் வசிக்கும் திருகோணமலை நகரில் தபாற்கந்தோர் தெருவில் செருப்பு தைக்கும் தொழில் செய்யும் பெண்மணிக்கும் அவரது குடும்ப

02 ஆம் பக்கத்தில்...

## நோன்பாளிகளுக்கும் 5000 ரூபா

ரமழான் நோன்பாளிகளுக்கும் குறைந்த வருமானமுடையவர்களுக்கும் 5000 ரூபா நிவாரண கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதனை பெற்றுக் கொள்வதற்கு இறுதி திகதி, இல்லை

02 ஆம் பக்கத்தில்...

## திருமலையில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(எப்.முபாரக்)

திருகோணமலைமொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அத்தாபெந்திவெவ பகுதியில் உள்ளூர் மற்றும் வெளியூரில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகளுடன் சந்தேக நபரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

02 ஆம் பக்கத்தில்...

## ரணில் வருகிறார்

(ராஜ்)



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க அடுத்த மாதத்திற்குள் தமது கட்சிக்கு கிடைத்துள்ள தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்றுக்கொள்வார் என அந்த கட்சியின் தவிசாளர்

02 ஆம் பக்கத்தில்...

## திருமலையில் உயிரிழந்த வயோதிபருக்கு கொரோனா

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலைகோமரங்கடவல பிரதேச வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட வயோதிபர் நேற்று முன்தினம் உயிரிழந்த நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று

02 ஆம் பக்கத்தில்...

## 5000 ரூபா தரவில்லை திருமலை கரையோர மக்கள் விசனம்

(பொன்ஆனந்தம்)

திருகோணமலை நகரத்தில் உள்ள கரையோர கிராமங்களில் ஒன்றான திருக்கடலூர் கிராமத்தை சார்ந்த பெண்கள் தமக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு இம்முறை வழங்கப்படவில்லை என கவலை தெரிவித்தனர்.

திருக்கடலூர் கிராம சேவகர் காரியாலயத்தில் கூடிய இம்மக்கள் தமது பெயர்கள் வரவில்லை என்பதுடன், தமக்கான கொடுப்பனவும்

02 ஆம் பக்கத்தில்...









## நாட்டை விற்க இந்த அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவரவில்லை

(காந்தன்)

நாட்டை சீனாவின் காலனித்துவத்தின் கீழ் கொண்டுவருவத்காக இந்த அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவரவில்லை என முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்ட அபயாராம விகாரையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் இதனைத் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...






## மண்சரிவு அபாய எச்சரிக்கை



(கிஷாந்தன்)

மலைநாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சில மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேகாலை, கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறாக மண்சரி அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக

02 ஆம் பக்கத்தில்...









## தொடர்ந்து வீழ்ச்சியடையும் டொலர்

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதற்கமைய டொலர்

02 ஆம் பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தான்குடி அன்வர் வித்தியாலயத்திற்குள் இனம் தெரியாதோர் அட்டகாசம்; உடமைகளுக்கும் சேதம்





(மொஹமட் ரிபாய்)

மட்டக்களப்பு மத்தி வலயம், காத்தான்குடி பிரதேச கல்விப் பணிமனையின் கீழ் உள்ள பாடசாலைகளில் ஒன்றான அன்வர் வித்தியாலயத்திற்குள் இரவு வேளைகளில் உட்புகுந்த இனம் தெரியாதோர் உடமைகளுக்கு சேதம் விளைவித்துள்ளனர். குறிப்பாக அங்கு வைக்கப்பட்டிருந்த 50 க்கும் மேற்பட்ட பெரிய, சிறிய பூச்சாடிகள் மற்றும் நினைவுக் பலகையினையும் உடைத்து சேதப்படுத்தியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நேற்று 15.04.2021 வியாழக்கிழமை காலை பாடசாலைக்குச் சென்ற போதே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளமை தெரிய வந்ததாக பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் காத்தான்குடி நகரசபை உறுப்பினர், ஊடகவியலாளர் ஏ.எல்.டீன் பைரூஸ் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கவனத்துக்கு கொண்டு சென்றதை அடுத்து பாடசாலைக்கு விரைந்து வந்த பொலிசார் உடன் விசாரனைகளை ஆரம்பித்தனர். பாடசாலை விடுமுறை காலம் என்பதனால் மேற்படி செயலானது சிறுவர்களால் செய்ய வாய்ப்பில்லை என்றும் இது வேறு ஒரு நபரினால் அல்லது தரப்பினரால் திட்டமிட்டு செய்திருக்கலாம் என தாங்கள் சந்தேகிப்பதாக பாடசாலை அதிபர், பெற்றோர், பாடசாலை சமூகத்தினர் தெரிவித்தனர்.

மேற்படி நாசகார செயலில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என பெற்றோர் சமூகத்தினர் வேண்டிக் கொண்டனர்..

மேற்படி சம்பவமானது நேற்று முன்தினம் அல்லது நேற்று இரவு இடம்பெற்றிருக்கலாம் என தான் சந்தேகிப்பதாக அதிபர் செய்த முறைப்பாட்டினை அடுத்து விரிவான விசாரணை ஒன்றினை மேற்கொள்வதாக பொலிசார் இதன் போது தெரிவித்தனர்.




## ஒலுவில் ஜே.வஹாப்தீன் எழுதிய 'முடக்கத்தான்' கவிதை நூல் வெளியீடும்,கவிதை உரையும்

(பி.எம்.எம்.ஏ.காதர்)

பன்முக ஆளுமை ஒலுவில் ஜே.வஹாப்தீன் எழுதிய முடக்கத்தான் கவிதை நூல் வெளியீடும்,கவிதை உரையும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒலுவில் கிறீன் வாசலில் மூத்த கவிஞர் சோலைக்கிளி தலைமையில் நடைபெற்றது.

ஒலுவில் ஜீனா ஷராபியின் கிறாத்தோடு நிகழ்வு ஆரம்பமானது.இந்த நிகழ்வில் முடக்கத்தான் நூல் பற்றி பேராசிரியர் செ.யோகராசா, பேராசிரியர் றமீஸ் அப்துல்லா ஆகியோர் உரையாற்றினார்கள்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எம்.மஜீட்,தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.எம்.ஐயூப்,எழுத்தாளர் எம்.அப்துல் றஸாக்,ஆகியோர் நட்புரையாற்றினார்கள்.




எழுத்தாளர் உமாவரதராஜன்,கலாநிதி ஹனிபா இஸ்மாயில்,மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றின்ஸான்,கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் அதிதிகளாக கவிஞர்களான பாலமுனை பாறுக்,கவிஞர் எஸ். ஜலால்டீன்,சொல்லன்பன் நஸ்றுதீன்,பாலமுனை முஹா,ஒலுவில் சியா ஆகியோருடன் பாடகர்களான ஈ.எல்.பௌசுர்றஹ்மான்,மக்கீன் ஹாஜி,நிந்தவூர் சரீப் ஆகியோர் பாடல்களைப் பாடி சபையோரை மகிழ்வித்தனர் பிறை எப்.எம்.அறிவிப்பாளர் எம்.எச்.முகம்மட் றாபி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

## யாழ் இளைஞர்கள் 1600 பேர் இராணுவத்தில்

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், பிரிவினைவாதத்துக்கு ஆதரவாக மக்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதை இன்னும் காணக்கூடியதாக உள்ளது.இத்தகைய சூழ்நிலையில், தமிழ் இளைஞர்கள் இராணுவத்தில் சேர முன்வந்திருப்பது மிகப்பெரிய வெற்றியாகும் என்று சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார்.அத்துடன், கோவிட் தொற்றின்போது பொது மக்களுக்கு தேவையான தனிமைப்படுத்தல் வசதிகளை வழங்குவதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவம் மற்றும் விமானப்படை வீரர்கள் செய்த சேவையையும் இராணுவ தளபதி இதன்போது பாராட்டியுள்ளார்.

## செருப்பு தைக்கும் தொழிலாளியின்

உறுப்பினர்கள் நான்கு நபர்களுக்கும் நேற்று வியாழக்கிழமை செய்யப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொவிட்19 உறுதிப்படுத்தப்பட்டதாக உப்புவெளி பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை நகர பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக எல்லைக்கு உட்பட்ட தலைமையக பொலிஸ் நிலையத்தில் போக்கு வரத்து பிரிவில் கடைமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு கொவிட்19 தொற்று உறுதியானதாக நகர பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த கொவிட்19 தொற்றாளர்களை பொருத்தமான கொரோனா மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்வதாக திருகோணமலை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம் ஈடுபடுகின்றது.

## 5000 ரூபா தரவில்லை திருமலை கரையோர

வழங்கப்படவில்லை என முறையிட்டனர். கணவனை இழந்தவர்கள் வயோதிப பெண்கள் இவ்வாறு அங்கு கூடியிருந்தனர்.

இதற்கு முன்னர் கொரோனா பாதிப்புக்குள்ளாகிய போது தமக்கு கொடுப்பனவு வழங்கியிருந்ததகாவும் தற்சமயம் வழங்கும் நிதி தமக்கு ஏன் வழங்கப்படவில்லை எனவும் கேள்வி எழுப்பிய மக்கள் தமக்கான இந்நிதியை வழங்க நடவடிக்கைகள் எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

## மண்சரிவு அபாய எச்சரிக்கை

தேசிய கட்டட ஆராய்ச்சி மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக குறித்த மாவட்டங்களில் மண்சரிவு ஏற்படக் கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டுமென்று தேசிய கட்டட ஆராய்ச்சி மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு, வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் கடும் இடி மின்னலுடன் கூடிய மழைப் பெய்யக் கூடுமென்று வளிமண்டலவியல் திணைக்களத்தினால் இன்று பிற்பகல் சிவப்பு எச்சரிக்கை அறிவித்தலொன்று விடுக்கப்பட்டுள்ளது.

## ரணில் வருகிறார்

வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏகமனதான தீர்மானத்திற்கு அமைய ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்க தயாராகி வருகிறார் எனவும் அவர் கூறியுள்ளார்.

காலியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், வஜிர அபேவர்தன இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

## நாட்டை விற்க இந்த அரசாங்கத்தை ஆட்சிக்கு

கடந்த அரசாங்கம் நாட்டின் சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்க முனையும் போது நாங்கள் அதனைத் தடுத்து நிறுத்தினோம்.

அத்தோடு இந்த அரசாங்கத்தின் வெற்றிக்காக நாங்கள் மிகவும் பாடு பட்டோம், ஆனால் நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்வதற்காக அவர்களை ஆட்சிக்கு கொண்டுவரவில்லை.

நாட்டின் ஒற்றுமையையும் தனித்துவத்தையும் பாதுகாப்பதற்காகவே அவர்களை ஆட்சிக்குக் கொண்டு வந்தோம் என அவர் கூறினார்.

கொழும்பு துறைமுக நகர வேலைத்திட்டத்தை நாங்கள் எதிர்க்கவில்லை, ஆனால் சீன கிராமத்தை உருவாக்குவதை நாங்கள் எதிர்க்கின்றோம்.

நாட்டை விற்பதற்கோ குத்தகைக்குக் கொடுப்பதற்கோ அல்லது நாட்டுக்கு பொருத்தமற்ற கொள்கைகளை உருவாக்குவதற்கோ மக்கள் இந்த அரசாங்கத்திற்கு அதிகாரத்தை பொற்றுக் கொடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

மூன்றில் இரண்டு அதிகாரத்தை வைத்துக் கொண்டு பெண்ணை ஆணகாமற்றும்மே மாற்ற முடியாது என முன்னல் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன கூறியது போன்று இவர்களும் செயற்பட முற்பட்டால் அதற்கு நாங்கள் இடம் வழங்க மாட்டோம்.

ஆட்சியில் உள்ளவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாத திட்டங்களை முன்வைத்து நாட்டை நாசமாக்க முனைந்தால், இந்த ஆட்சியாளர்களின் வெற்றியடைய செய்ததை போன்றே அவர்களின் திட்டங்களைத் தோற்கடிக்கவும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என்றார்.

## தொடர்ந்து வீழ்ச்சியடையும் டொலர்

ஒன்றின் விற்பனை விலை நேற்றைய தினம் 204.62 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று வீதத்திற்கமைய டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 199.80 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

பிரித்தானிய ஸ்டெர்லிங் பவுண்ட் ஒன்றின் விற்பனை விலை 283.39 ரூபாவாக பதிவாகியுள்ளது. யூரோ ஒன்றின் விற்பனை விலை 245.84 ரூபாயாக பதிவாகியுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## நோன்பாளிகளுக்கும் 5000 ரூபா

எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி அதிகாரிகளை தொடர்பு கொண்டு இந்த தொகையை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

கிராம சேவையாளர் பிரிவுகள் மட்டத்தில் இனங்காணப்பட்ட குடும்பங்களுக்காக 5000 ரூபா கொடுப்பனவை வழங்கும் வேலைத்திட்டத்தை பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமையை ஒழிப்பதற்கான ஜனாதிபதி செயலணியும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து அமுல்படுத்துகின்றது.




## திருமலையில் உயிரிழந்த வயோதிபருக்கு கொரோனா

உறுதி செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டவர் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் கம்பஹா பகுதியிலிருந்து கோமரங்கடவலதிறப்பன பிரதேசத்திற்கு வருகை தந்ததாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் 86 வயது உடையவர் எனவும் அவருடைய சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வயோதிபருக்கு சிகிச்சை வழங்கிய வைத்தியர் உட்பட ஊழியர்களையும் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபடுத்த உள்ளதாகவும் திருகோணமலை பிராந்தியத்திற்கு பொறுப்பான அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன் தொடர்ந்தும் திருகோணமலை மாவட்டத்தில் ஆன்டிஜென் மற்றும் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.




## திருமலையில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

இச்சம்பவம் நேற்று பிற்பகல்இடம்பெற்றுள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர் ரொட்டவெவஅத்தாபெந்திவெவ பகுதியைச் சேர்ந்த சந்தனமிகே சமரசிங்க (47 வயது) எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

மொறவெவ பொலிஸ் பொறுப்பதிகாரி வசந்த சந்ரலால் அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அவருடைய வீட்டை சோதனையிட்ட போது அவருடைய வீட்டிலிருந்து இந்த துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதாகவும் துப்பாக்கியை பாவிப்பதற்கான காரணங்கள் எதுவும் இன்னும் தெரியப்படுத்தப்படாத பட்சத்தில் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மொரவெவ பொலிசார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SwissLife Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...


மருத்துவ காப்புறுதி


வாகனக் காப்புறுதி


குழந்தைகளுக்கான காப்புறுதி


ஆயுட் காப்புறுதி


சட்டக் காப்புறுதி


Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65



# உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை

தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923

n.uthayakumar1981@gmail.com



# SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி



# SRI JEWELLERY



Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



# MATHE BILDUNGSZENTRUM
# கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும்
பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா -வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Franzósisch, Englisch,Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen



# Aaran Ayurveda
## & Wellness Massage



Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291
Krankenkasse Anerkannt


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை புத்தாண்டை கொண்டாட முடியாத துர்ப்பாக்கிய நிலையில் தோட்ட தொழிலாளர்கள்

க.கிஷாந்தன்

எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் அரசாங்கம் நிச்சயம் இழுப்பறி நிலையை சந்திக்கும் என மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

முன்னணியின் யாழ்.மாட்ட அமைப்பாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன் இந்த குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

மேலும் 1000 ரூபா சம்பள அதிகரிப்பு பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு கிடைகின்றதா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்;

வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு அதிகரித்துள்ளது. அதாவது எமது கடலில் உள்ள அனைத்து வளங்களையும் அள்ளிச் செல்லும் அளவுக்கு அவர்களின் ஆக்கிரமிப்பு உள்ளது. எதிர்காலத்தில் எமக்கு கடல் வளம் அற்று போகும் நிலைமை உருவாகியுள்ளது. இந்திய மீனவர்கள் எமது கடல் வளத்தை அழித்தும் சூறையாடியும் வருகின்றனர். நாம் இந்த மீனவர் பிரச்சினை சம்பந்தமாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அண்மையில் சந்தித்து பேசியுள்ளோம். இதன்போது இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்புக்கு முடிவு எடுக்கப்படும் என அமைச்சர் கூறினார். ஆனால் இதுவரை தீர்வை வழங்காமையால் வடக்கு மீனர்கள் அனாதரவாக்கப்பட்டுள்ளனர். இப்போது முன்பைவிட மோசமாக இந்திய மீனவர்கள் இத்துமீறும் நிலை உருவாகியுள்ளது. இந்த பிரச்சினையில் இந்தியா இரட்டை வேடம் பூண்டுள்ளது. விசேடமாக தமிழக அரசியல் தலைவர்கள் இந்த பிரச்சினைக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் நிலையுள்ளது. ஆகவே இவ்வாறு செயற்பட வேண்டாம் என நாம் கேட்டுக்கொள்கின்றோம்.



இலங்கை என்பது சுயாதீனமாடு என்றவகையில் எமது கடற்பரப்;பை கொள்ளையடிக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றோம். எனவே ஜனாதிபதி, கடற்றொழில் அமைச்சர் ஆகியோர் எமது கடல் வளத்தை பாதுகாக்க முன்வர வேண்டும்.

இதேவேளை, பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு தொடர்பிலும் அவர் கருத்து தெரிவித்தார்.

1000 ரூபா சம்பள அதிகரிப்பு உறுப்படியாக கிடைக்கின்றதா? என சந்தேகம் எழுந்துள்ளது. தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கையில் எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. சித்திரை புத்தாண்டை கொண்டாட முடியாத ஒரு துர்பாக்கிய நிலையே தோட்ட தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே ஆயிரம் ரூபாவுக்கு அரசாங்கமும், தொழிற்சங்கங்களும் உத்தரவாதத்தை வழங்க வேண்டும். இன்றும் சலர் 1000 ரூபாவுக்கு வேட்டு வைக்க சிலர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். எனவே ஆயிரம் ரூபா அதிகரிகரிப்பை அரசாங்கம் முதலில் அரச தோட்டங்களில் வழங்க வேண்டும்.

அதேபோல் எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் அரசாங்கம் நிச்சயம் இழுப்பறி நிலையை அதாவது பின்னடைவை சந்திப்பதை தவிர்க்க முடியாது. ஹிட்லரை ஆட்சிக்கு கொண்டு வந்தவர்களும் இன்று மன விரகத்தியில் உள்ளனர் என்றார்.

# 'சுபீட்சம் செய்தி' தந்த பலன்



மரப்பாலம் பஸ்தரிப்பு நிலையத்தில் பாம்புப்புற்று வளர்ந்துள்ளதனால் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என சிலநாட்களுக்கு முன்பு செய்தி வெளியிட்டிருந்தோம்.

இந்நிலையில், செங்கலடி பிரதேச சபை தலைவர் நேரடியாக சென்று பாம்புப் புற்றினையும் அகற்றி பஸ் தரிப்பு நிலையத்தினை சுத்திகரிப்பு செய்து வர்ணம் பூசி பொதுமக்கள் பாவனைக்கு வழங்கி வைத்துள்ளார்.



# மின்னல் தாக்கி விவசாயி மரணம்

ரக்ஸனா

மட்டக்களப்பு மாவட்டம் படுவாங்கரைப் பிரதேசத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மலையர் கட்டு கிராமத்தில வியாழக்கிழமை மாலை மின்னல் தாக்கியதில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது விசாயி ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தொடர்பில் அவர் மேலும் தெரியவருவதாவது.

தற்போது அப்பகுதியில் சிறுபோக வேளாண்மைச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகள் மும்முரமாக வயலில் வேலை செய்து கொண்டு வருகின்றனர். இந்நிலையில் வியாழக்கிழமை நண்பகல் வரைக்கும் அப்பகுதியில் கடும் உஸ்னத்துடன் வெயில் காணப்படது. ஆனாலும் மாலை வேலையில் திடீரென அப்பகுதியில் பலத்த இடி மின்னல், மற்றும் காற்றுடன் மழை பெய்திருந்தது.

இந்நிலையில் மாலையர்கட்டு கிராமத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது மின்னல் தாக்கி வயிலில் வேலை செய்து ன்டிருந்த 32 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான மாலையர் கட்டு கிராமத்தைச் சேர்ந்த நல்லதம்பி மோகனசுந்தரம் எனும் விவசாயி உயிரிழந்துள்ளதாக அப்பகுதி கிராம சேவகர் தெரிவித்தார்.

இந்நிலையில் சடலம் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் வெல்லாவெளி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கொரோனா வைரஸ் பாதுகாப்பு விழிப்பூட்டல் கருத்தரங்கு



(ந.குகதர்சன்)

தேசிய உணவு பாதுகாப்பு மாதத்தினை முன்னிட்டு சுகாதார அமைச்சின் வலியுறுத்தலுக்கமைய நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் பிரதேச சுகாதார அலுவலகம் தோறும் இடம் பெற்று வருகின்றது.

அந்த வகையில் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் பள்ளிவாயல் நிருவாகத்தினருக்கு நோன்பு மாதத்தினை முன்னிட்டு கொரோனா வைரஸ் பாதுகாப்பு விழிப்பூட்டல் கருத்தரங்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம் பெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ரீ.நஜீப்கானின் வழிகாட்டலில் பொது சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம்.நஸீர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மேற்பார்வை பொது சகாதார பரிசோதகர் எம்.எஸ்.நௌபர், பொது சகாதார சுகாதார பரிசோதகர்களான எம்.ஏ.ஏ.நௌசாத், ஏ.அர்.எம்.ஹக்கீம் ஆகியோர் கலந்து கொண்டு நோன்பு காலத்தில் நோன்பு கஞ்சி தயாரிப்பது தொடர்பாகவும், அதனை கையாள்வது தொடர்பாகவும் விளக்கம் அழிக்கப்பட்டதுடன், நோன்பு காலத்தில் கொரோனா பாதுகாப்பு கருதி சுகாதார திணைக்களத்தின் விதிமுறைகளை பேணி நடந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு நோன்பு காலத்தில் நோன்பு கஞ்சி தயாரிப்பது தொடர்பில் பள்ளிவாயல்களுக்கு சுகாதார பரிசோதகர்கள் வருகை தந்து பார்வையிடுவதுடன், சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பள்ளிவாயல் நிருவாகத்தினருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

நோன்பு காலத்தில் பள்ளிவாயல்களுக்கு முகக்கவசம் அணிந்து வருதல், தொழுகை விரிப்பு கொண்டு வருதல், சமூக இடைவெளியை பேணுதல், தொழுகைக்கு குறைந்தோரை அனுமதித்தல், நோன்பு கஞ்சி தயாரிப்பவர்கள் சுகாதார விதிமுறைகளை பேணி நடக்க வேண்டும், பள்ளிவாயல் மற்றும் மலசல கூடங்கள் சுத்தம் பேணப்படல், பள்ளிவாயலில் கொரோனா பாதுகாப்பு நடைமுறைகள் பேணப்படுதல் போன்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது.

# அக்கரைப்பற்று Inspiring youths அனுசரணையில் நடந்த 3 நாள் இலவச ஹிஜாமா மருத்துவ நிகழ்வு





(வாஸ் கூஞ்ஞ)

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று Life care Hospital உடன் Inspiring youths அமைப்பு இணைந்து நடாத்திய இலவச ஹிஜாமா மருத்துவ நிகழ்வு 3 நாட்களாக தொடராக அக்கரைப்பற்று பிரதான வீதியில் அமைந்திருக்கும் life care Hospital ல் மிக சிறப்பாக இடம் பெற்றது.

சாதாரணமாக ஒரு நபருக்கான இந்த மருத்துவ செலவு ரூபாய் 2500/= ஆகும் .ஆனாலும் இது முற்றிலும் இலவசமான முறையில் மக்களுக்கு வழங்கப்பட்டது

இந்நிகழ்வினை 10 வருடங்களுக்கு மேல் வெளிநாடுகளிலும் தலைநகரிலும் பல தனியார் மருத்துவமனைகளில் சேவையாற்றிவரும் அக்கரைப்பற்றைச் சேர்ந்த Hijama Cupping Therapist: Mr. Mujahidh Aboobackar (BSc. Cupping Therapy Pro. AdvDip. in Counseling Psychology) அவர்களைக்கொண்டு, Lifecare Hospital நிறுவனர் Mr. Siraj அவர்களுடன் இணைந்து அக்கரைப்பற்று Inspiring youths அமைப்பின் தலைவர் மௌலவி றுஷைத் அலி அவர்களின் தலைமையில் இந்நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது.

அக்கரைப்பற்று இளைஞர் கழக சம்மேளன சூழல் பாதுகாப்பு செயலாளர், Inspiring youths தலைவர் மௌலவி M.A றுஷைத் அலி மற்றும் Inspiring youths அமைப்பின் செயலாளர் சாஜித் ,துனை செயலாளர் அலி ரிஸ்லி , ஆலோசகர் M.N அனஸ், பொருளாளர் நுஸ்கி மற்றும் முஸ்னி போன்றோர் இந்நிகழ்வில் கலந்துசிறப்பித்தார்கள் .







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் சொந்தக் காணியை இலவசமாக பகிர்ந்தளித்த சமூக ஆர்வலர்

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிரான் பகுதியில் உள்ள சமூக ஆர்வலரான குருசுமுத்து லவக்குமார் தனக்குச் சொந்தமான 12 , 1/2 ஏக்கர் காணியினையே காணியற்ற வறிய குடும்பங்களுக்கு இவ்வாறு இலவசமாக பகிர்ந்தளித்துள்ளார்.

மாவட்டம் பூராகவுமுள்ள கிராமங்கள் தோறும் காணியற்ற குடும்பங்களை இனங்கண்டு ஒரு குடும்பத்திற்கு தலா பத்து பேர்ச் வீதம் 224 பேருக்கு காணிகளை பகிர்ந்தளிக்கவுள்ளார்.

இதன் முதற்கட்டமாக 46 குடும்பங்களுக்கான காணிகளை பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் கிரானில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் வறுமை நிலையில் வாடகை வீட்டில் வசிப்போர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் கணவனை இழந்தோர் என அடையாளம் காணப்பட்டவர்களின் எதிர்கால நலன்கருதி இக் காணிகள் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

பயனாளிகளின் பிள்ளைகளின் கல்வி மேம்பாடு, பொருளாதாரம் விருத்தி போன்ற விடயங்களை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கையை முன்னெடுத்ததாக நன்கொடையாளர் வி.லவக்குமார் தெரிவித்தார்.

இதில் பொது தேவைகளான மத ஸ்தலங்கள், பாடசாலை போன்றவற்றிற்காக காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், குடியிருப்பாளர்களின் எதிர்கால தேவை மற்றும் வாழ்வாதாரத்தினை நிவர்த்தி செய்ய சிறுதோட்டப் பயிர் செய்கை நடவடிக்கைக்காக குத்தகை அடிப்படையில் மேலும் 15 ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

இந் நிகழ்வில் அருட்தந்தை நியூட்டன் அடிகளார், சகல மத ஐயப்பன் யாத்திரை குழு குருசாமி சாம்பசிவம் புனிதாபரன், இளைஞர் அணி தலைவர் அனோஜன் மற்றும் இளைப்பாறிய மரமுந்திரிகை கூட்டுத்தாபன முகாமையாளர் டி.நிதர்சன் ஆகியோர்கள் அதிதிகளாக கலந்து கொண்டதுடன் காணி வழங்குனருக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.





# அனுமதிப்பத்திரமின்றி வடிசாராயம் மறைத்து வைத்திருந்த ஒருவர் கைது

(எப்.முபாரக்)

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி ஐந்து வடிசாராயம் போத்தல்களை வீட்டில் மறைத்து வைத்திருந்த ஒருவரை நேற்று வியாழக்கிழமை கைது செய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் வென்ராசன்புர பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் விற்பனை செய்வதற்காக வீட்டில் மறைத்து வைத்திருந்த நிலையிலே ஐந்து வடிசாராயம் போத்தல்களுடன் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை தடுத்து வைத்துள்ளதோடு நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# ‘சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவகங்களை மூடுவதற்கு தீர்மானம்’



(பாறுக் ஷிஹான்)

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் போன்றவற்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ. சுகுணன் தெரிவித்தார்.

தற்போது நோன்பு காலம் ஆகையால் வீதியோரங்களில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றது. அங்கு சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படவில்லையென அறியக் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் முகக்கவசம், கையுறை போன்றவற்றை பாவிக்க வேண்டுமென கேட்டுள்ளார்.

பொத்துவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை, கல்முனை ஆகிய நகர் பிரதேசங்களிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள், பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவினரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுவருவதாதவும், இதன் போது உணவகங்கள் மற்றும் வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள், உணவு பரிமாறுவோர் ஆகியோருக்கு சுகாதாரம் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுவருவதாகவும் கூறினார்.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகாரசட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய வேண்டுமெனவும், உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றின் தூய்மையை உறுதிப்படுத்தல், அதிக எண்ணெய், அதிக சீனி, அதிக உப்பு கொண்ட உணவுகளை விற்காதிருத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

உணவு பாதுகாப்புசட்டதிட்டங்களை மீறுபவர்களுக்கெதிராக நீதிமன்றினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதோடு, பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள்கண்டுபிக்கப்பட்டால் அதன் உரிமையாளருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்நிலையங்கள் மூடப்படுமெனவும் மேலும் தெரிவித்தார்.

# காத்தான்குடி ஆதார வைத்தியசாலயை முழுமையாக இயங்க வைக்க துரித நடவடிக்கை

(ஏ.எல். டீன் பைரூஸ்)

கொரோனா சிகிச்சை நிலையமாக தற்போது தொழிற்படும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையை காத்தான்குடி மக்களின் அவசிய தேவை கருதி வைத்தியசாலையின் அதே கட்டடத்தில் வைத் தியசாலையின் சகல பிரிவுகளையும் இயங்க வைக்க மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அல்ஹாபிழ் நஸீர் அஹமட் துரித நடவடிக்கை எடுத்து வருவதாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் முபீன் தெரிவித்தார்.

கடந்த 8/3/2021 திங்கட்கிழமை காத்தான்குடி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற விஷேட அபிவிருத்திக் கூட்டத்தில் வைத்தியசாலை கொரோனா சிகிச்சை நிலையமாக செயற்படுவதால் காத்தான்குடி மக்கள் எதிர்நோக்கும் சுகாதார ரீதியிலான பிரச்சினைகள் பாராளுமன்ற உறுப்பினர் நஸீர் ஹாபிஸின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு இவ்விடயத்தில் துரித நடவடிக்கை எடுக்குமாறு காத்தான்குடி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் ஜாபிர், பள்ளிவாயல்கள் சம்மேளனப் பிரமுகர்கள் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் முபீன் ஆகியோரினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் கொழும்பில் சுகாதார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு பாராளுமன்ற உறுப்பினரால் கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படடு வருவதாகவும் இவ்விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் காத்தான்குடிக்கு விரைவில் விஜயம் செய்ய உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் தன்னிடம் தெரிவித்தாக முபீன் மேலும் தெரிவித்தார்.

# எங்கும் எதிலும் அரசியல் கலந்திருப்பதே சமூகத்தின் இன்றைய நிலைக்கு காரணம்

(ரக்ஸனா)

எங்கும் எதிலும் அரசியல் கலந்திருப்பதே தற்போது நமது சமூகம் அவஸ்தைப்படுவதற்கு காரணமாகும் என மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஏறாவூர் இளம் தாரகை விளையாட்டு கழகத்தின் 50 வது ஆண்டு நிறைவை முன்னிட்டும் ஏறாவூரின் அரசியல் முன்னோடிகளான முன்னாள் விசேட ஆணையாளர் மர்ஹூம் எம்.ஏ.சி. அப்துல்றஹ்மான் மற்றும் முன்னாள் பிரதியமைச்சர் டொக்டர் பரீட் மீராலெப்பை ஆகியோரின் நினைவாகவும் நடாத்தப்பட்ட கிரிக்கெற் இறுதிச்சுற்றுப் போட்டி நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

ஏறாவூர் அலிகார் தேசிய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் புதன்கிழமை மாலை போட்டியின் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட் நாங்கள் எல்லாவற்றிலும் அரசியலை மாத்திரம் மையமாக வைத்து சமூகத் தீர்மானங்களை எடுத்து வந்துள்ளோம். இதுவொரு பாரம்பரியமாக இடம்பெற்று வந்துள்ள நிழ்வாகும்.



எங்களுடைய சமூக அரசியல் தலைமைகள் இவ்வாறான அரசியல் நிலைப்பாட்டை எடுத்ததன் காரணமாக இப்பொழுது ஒட்டு மொத்த சமூகமும் இந்த சிந்தனைக்குள் அகப்பட்டு அவஸ்தைப்பட வேண்டியுள்ளது.

இதனைப் புரிந்துகொண்டு எங்களை நாங்கள் கண்ணாடியில் பார்த்துப் புடம்வேண்டியுள்ளது.

அரசியலை மையமாக வைத்து அனைத்தையும் அணுகும் அசிங்கமான போன்னை மாற்றியமைக்க வேண்டும். தேர்தல் முடிந்தகையோடு அரசியலை விட்டு விட வேண்டும்.

எல்லாவற்றிலும் அரசியலைக் கலப்பதால் ஆன பயன் ஏதுமில்லை. இது பற்றி ஒட்டு மொத்த சமூகத்திலுள்ள அமைப்புக்களும் தனி நபர்களும் சிந்திக்க வேண்டும்.

சமீபத்தில் அமைச்சர் நாமல் ராஜபக்ஸவுடன் மிக நீண்டநேரம் பேசக் கிடைத்தது. கிழக்கில் இளைஞர்களை எவ்வாறு அணி திரட்டி நாட்டின் தேசிய அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்ய முடியும் என்பது பற்றி விவாதித்தோம்.

விளையாட்டு அமைச்சர் நாமலினால் தற்போது குருநாகலில் முன்னெடுக்கப்படும் செயற்திட்டத்தை மட்டக்களப்பிலும் நடத்த வேண்டும் எனக் கூறியுள்ளார். இதற்கு தான் மட்டக்களப்பில் தங்கியிருந்தாவது அலுவல்களைக் கவனிப்பேன் எனக் கூறியுள்ளார்.

இவ்வாறான ஒரு அமைச்சர் எங்களுக்கு கிடைத்துள்ளது மிகப் பொருத்தமான வாய்ப்பாகும்.

ஏறாவூரில் தொழில் இல்லாத இளைஞர்கள், அங்கவீனர்கள் விதவைகள் அதிகம் உள்ளனர் ஒவ்வொருவருடைய பிரச்சினைகளும் அடையாளப்படுத்தப்பட்டு தீர்க்க வேண்டும் என்றார்.

# மத்திய முகாம் சமுர்த்தி வங்கியில் கை விசேட நிகழ்வு





(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

தமிழ் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சமுர்த்தி வங்கியின் நடவடிக்கைகள் சுபநேரம் பார்த்து நேற்று வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப் புதுவருடத்தில் சமுர்த்தி வங்கியில் பொதுமக்கள் தங்களின் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது வங்கி முகாமையாளர் ப.தமிழ்வாணன் அவர்களினால் கைவிஷேசம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வங்கியின் பிரதி முகாமையாளர். எஸ்.திருட்செல்வம். சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வங்கி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கல்குடா தொகுதி பள்ளிவாயல்களுக்கு பேரீச்சம்பழம் வழங்கி வைப்பு



(ந.குகதர்சன்)

ரமழான் மாதத்தினை முன்னிட்டு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட பள்ளிவாயல்களுக்கு பேரீச்சம்பழம் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கல்குடா தொகுதியில் பதிவு செய்யப்பட்ட பள்ளிவாயல்களுக்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் கல்குடா கிளை காரியாலயத்தில் பேரீத்தம் பழம் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை பிரதி தலைவர் மௌலவி ஏ.பி.எம்.முஸ்தபா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தென்னை மற்றும் சிறு கைத்தொழில் இராஜங்க அமைச்சரின் கிழக்கு மாகாண இணைப்புச் செயலாளரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்பாட்டாளருமான என்.எம்.சுஜப், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கல்குடா தொகுதி செயற்பாட்டாளர்களான எஸ்.எம்.சிம்ஷான் மற்றும் என்.எம்.எம்.சியாம், சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர், பள்ளிவாயல் நிருவாக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக டாக்டர் அல் அமீன் றிஷாத் கடமையேற்றார்!



**(நூருல் ஹுதா உமர்)**

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக சாய்ந்தமருதை சேர்ந்த டாக்டர் அல் அமீன் றிஷாத் நேற்று (15) தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை திட்டமிடல் பொறுப்பதிகாரி டாக்டர் எம்.சி. மாஹிர், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரிடாக்டர் ஏ.ஆர்.எம்.அஸ்மி, சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை செயலாளர் ஏ.ஏ. மஜீத் , சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம். பளீல், தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.எம்.றஸ்மி உள்ளிட்ட பொது சுகாதார உத்தியோகத்தர்கள், காரியாலய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அம்பாள் ஆலயத்தில் புத்தாண்டு விசேட பூஜையும் கைவிசேசமும்!



வரலாற்றுப்பிரசித்திபெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயத்தில் பிலவவருட புத்தாண்டையொட்டி காலையில் விசேட பூஜையும் அதனைத் தொடர்ந்து கைவிசேசமும் நடைபெற்றது.

**(வி.ரி.சகாதேவராஜா)**

# அருகம்பே வி.கழகம் சம்பியனாது லீக்கின் தலைவர் அஸ்மிக்கு விசேட கௌரவம்!





**(பைஷல் இஸ்மாயில்)**

அக்கரைப்பற்று உதைப்பந்தாட்ட அபிவிருத்தி லீக்கின் டீ பிரிவுக்கான இறுதிப் போட்டி பொத்துவில் அருகம்பே பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

லீக்கின் சுற்றுப் போட்டிக் குழுத் தலைவர் ஏ.எச்.ஹம்சா சனூஸ் தலைமையில் நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி அக்கரைப்பற்று குயுஊ கழகத்தை எதிர்த்து பொத்துவில் அருகம்பே கழகம் விளையாடியது.

இதில் 2:1 கோல்கள் அடிப்படையில் அறுகம்பை அணியினர் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. இந்த இறுதிப் போட்டிக்கு பிரதம அதிதியாக லீக்கின் தலைவரும், அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினருமாகிய அஸ்மி ஏ.கபூர் கலந்து கொண்டு சம்பியன் கிண்ணத்தை வழங்கி வைத்ததோடு இரு அணியினருக்கும் பதக்கம் அணிவித்து கௌரவித்தார்.

இந்த லீக்கின் பொதுச் செயலாளர் ஊடகவியலாளர் எம்.ஐ.எம்.றியாஸ் அதிபர் உட்பட பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பல முக்கிஸ்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

உதை பந்தாட்ட அபிவிருத்தி லீக்கின் வளர்ச்சிக்காக பாரிய தியாகங்களைச் செய்து அர்ப்பணிப்புகளுடன் செயற்பட்டு வரும் தலைவர் அஸ்மி ஏ.கபூருக்கு அறுகம்பை விளையாட்டுக் கழகத்தினால் விசேட கௌரவம் வழங்கப்பட்டதுடன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# பொத்துவிலில் அறநெறி நீதி நூல்கள் வழங்கும் நிகழ்வு!



**(வி.ரி.சகாதேவராஜா)**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பொத்துவில் பிரதேச செயலகமும் அறநெறிப் பாடசாலைகளும் இணைந்து நடாத்திய இந்து அறநெறி மாணவர்களுக்கு நீதிநூல்கள் துணை நூல்கள் வழங்கும் அறிமுக விழாவும் நூல் கண்காட்சியும் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வானது பொத்துவில் ஆலயடிபிள்ளையார் அறநெறிப் பாடசாலையில் பிரதேச செயலாளர் சந்தருவன் அநுருத்த தலைமையில் இடம்பெற்றது.

இதில் முன்னிலை அதிதியாக இந்துமதகுருமார் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் சிறப்பு அதிதிகளாக பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர்கள் கிராம உத்தியோகத்தர் மற்றும் சகல பாடசாலைகளின் அதிபர்கள் இந்து மன்றங்கள் பெற்றோர்கள் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டதுடன் மாணவர்களுக்கு பிரிவு ரீதியாக நூல்கள் வழங்கப்பட்டன.

# புனித நோன்பை முன்னிட்டு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு!



**(பைஷல் இஸ்மாயில்)**

அகில இலங்கை YMMA இன் தேசியத் தலைவர் சஹிட் எம். றிஸ்மியின் ஆலோசனைக்கும், வழிகாட்டலுக்கும் அமைவாக அட்டாளைச்சேனை YMMA ஏற்பாட்டில் புனித றமழான் மாதத்தினை முன்னிட்டு ஆலங்குளம் பிரதேசத்திலுள்ள வறிய மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வழங்கி வைக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை YMMA இன் தலைவரும், அதிபருமாகிய சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஐ.எம்.றியாஸின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு ஆலங்குளம் பல்தேவைக் கட்டடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு அட்டாளைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவரும், அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளனத் தலைவருமான சட்டத்தரணி எம்.எஸ்.எம்.ஜூனைத்தீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மேலும், அட்டாளைச்சேனை YMMA பிரதித் தலைவர் எம்.ஐ.ஹாசீம் ஆசிரியர், செயலாளரும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தருமாகிய ஏ.எல்.கியாஸ்தீன், பொருளாளர் ஏ.எம்.சுலைமாலெப்பை ஆசிரியர், உமர் பௌண்டேசன் தலைவர் எஸ்.எம். ஹுசைன், மௌலவி எஸ். அன்சார், பிரதி அதிபர் எம்.எச். றமீஸ் என பலரும் கலந்து கொண்டு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

PHOTO DIGITAL INTERNATIONAL
No. 6N, Mosque Lane, Kalmunai.
MASTER PRINTERS
Best Regional Printer For the Year 2013
No. BG6, Maligawatta National House Scheme, Colombo 10.
Mobile : 077 613 9227 / 075 260 0333 / 075 963 0000 E-mail : mmjesmin06@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org